## TNEA 2018 - Academic On-line Counselling

# Round 1 : Schedule and Instructions

**TNEA eligible Applicants with Aggregate (cut-off) Marks upto 190**

*Applicants should complete the following Activities during the specified duration as per the instructions*

| S.No | Activity | Scheduled Time | Instructions | Important |
|---|---|---|---|---|
| 1 | **Payment** | **21.07.2018 to 24.07.2018** | Payment of initial deposit<br>• Payment can be made online through TNEA portal as done during application registration (or) Payment can be made through Demand Draft (DD) drawn in favour of "The Secretary, Tamil Nadu Engineering Admissions Anna University", payable at Chennai on or after 01.07.2018<br>• General Candidates should pay Rs. 5000/- and Tamilnadu SC/SCA/ST candidates should pay Rs.1000/- | • Payments (including DD payments) have to be done during the time specified.<br>• DD payments have to be done at the nearest TFCs<br>• Late payments will not be accepted for Round 1.<br>• Candidates who do not make payment during the specified time in the current round will be allowed to make payment only in the next round of counselling (if available) and such candidates will have to participate for the prevailing vacancies at that round of counselling. |
| 2 | **Choice Entry and locking of Choice list** | **25.07.2018 to 27.07.2018 (5.00 pm)** | A) Entering the prepared choice list in the TNEA portal<br>B) Lock the entered choice list on the TNEA portal **before 27.07.2018 5.00 p.m** | • Applicants have no limitation on the number of choices that can be entered in the TNEA portal. Hence, enter as many as possible that you could order by preference.<br>• After locking the choices, it can not be unlocked. Therefore, check the choice list carefully before locking<br>• System will lock the choice list after the specified time if the applicant fails to lock the list on time |
| 3 | **Tentative allotment confirmation and option submission** | **28.07.2018 to 29.07.2018 (5.00 pm)** | **A)** Tentative allotment based on rank and choice list will be published **on 28.07.2018**<br>**B)** Applicants can view the tentative allotment details through their respective TNEA login<br>**C)** Applicants need to submit a allotment option **before 29.07.2018 5.00 pm** to confirm the tentative allotment | • Applicants who fail to submit the allotment option ( or confirm or decline the tentative allotment) shall have to forgo the tentative allotment. Such applicants can participate in the next round (if available) for the prevailing vacancies at that round of counselling. Such candidates need to enter the choices in that round again as well. |
| 4 | **Final Allotment** | **30.07.2018** | A) Final allotment based on rank, choice list and submitted allotment option will be published **on 30.07.2018**<br>B) Applicants can download the allotment order (if allotted) from their respective TNEA login | |
| 5 | **Report for Admission** | **03.08.2018** | Report to the allotted college for admission **on or before 03.08.2018** | |

SMS notifications will be sent to applicants' registered mobile regarding commencement of activities. Check your registered mobile for such alerts regularly. All established 42 TNEA Facilitations Centres will provide assistance for choice entry and option submission as done during application registration. All TNEA related activities should be performed only at https://tnea.ac.in only. Visit the same for regular updates about the TNEA counselling. Read the **Instruction to candidates** document for more information about procedures. Candidates who got admission to medical counseling should submit their medical allotment before confirmation of tentative allotment.

TNEA 2018- பொதுப் பாடப்பிரிவிற்கான ஆன்லைன் கலந்தாய்வு

**சுற்று 1 : கால அட்டவணை குறித்த தகவல்கள்**

**சுற்று 1 – ல் Cut-off மதிப்பெண் 190 வரை தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் பங்கு பெறுவர்**

*விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கீழ்காணும் செயல்பாடுகளை வழிமுறைகளின்படி நிறைவு செய்தல் வேண்டும்*

| வ.எண் | செயல்பாடு | கால அவகாசம் | வழிமுறைகள் | கவனிக்க வேண்டியவை |
|---|---|---|---|---|
| 1 | கல்லூரி முன்வைப்புத் தொகை கட்டணம் செலுத்துதல் | 21.07.2018 முதல் 24.07.2018 வரை | முன்வைப்புத் தொகை செலுத்துதல்<br>• முன்வைப்புத் தொகையை ஆன்லைனில் (online) TNEA இணையதளம் வழியாக அதாவது விண்ணப்பம் பதிவு செய்யும் போது செலுத்தியது போல் செலுத்த வேண்டும் (அ) வரைவோலையாக "The Secretary, Tamil Nadu Engineering Admissions, Anna University", payable at Chennai. என்ற பெயரில் 01.07.2018 அன்றோ (அ) அதன் பின்போ எடுக்க வேண்டும்.<br>• பொதுப்பிரிவு Rs.5000/-மும், தமிழ்நாடு SC/SCA/ST விண்ணப்பதாரர்கள் Rs.1000/-மும் செலுத்த வேண்டும். | • ஒவ்வொரு சுற்றிலும் கட்டணத்திற்கென்று குறிக்கப்பட்ட காலத்திற்குள் மட்டுமே அச்சுற்றின் விண்ணப்பதாரர்கள் தொகையை செலுத்த வேண்டும். கால தாமதமான கட்டணங்கள் அச்சுற்றில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.<br>• குறித்த காலத்திற்குள் முன்வைப்புத் தொகையை செலுத்த தவறிய விண்ணப்பதாரர்கள் அடுத்த சுற்று இருக்கும் பட்சத்தில், அடுத்த சுற்றில் கட்டணம் செலுத்தலாம் எனினும், அவ்வாறு செலுத்துவோர்கள் அச்சுற்றின் காலி இடங்களையே தேர்வு செய்ய இயலும்.<br>• வரைவோலை மூலமாக செலுத்த விரும்புவோர் அருகில் உள்ள TFC-க்கு குறித்த காலத்திற்குள் சென்று செலுத்த வேண்டும். |
| 2. | விருப்ப வரிசை பட்டியல் உள்ளிடுதல் மற்றும் இறுதி செய்தல் | 25.07.2018 முதல் 27.07.2018 மாலை 5 மணி வரை | விண்ணப்பதாரர்கள் 25.07.2018 முதல் 27.07.2018 அன்று மாலை 5 மணிக்குள் தயார் செய்த விருப்ப வரிசைப் பட்டியலை TNEA இணைய தளத்தில் உள்ளீட்டு உறுதி செய்ய வேண்டும். | • எத்தனை கல்லூரி - பாடப்பிரிவு வேண்டுமானாலும் விருப்ப வரிசை பட்டியலில் உள்ளிடலாம். எனவே, தங்களின் விருப்பத்தை வரிசைப்படுத்தி அதிக விருப்பங்களை உள்ளிடுவது நல்லது.<br>• ஒரு முறை விருப்ப வரிசை பட்டியலை இறுதி (Lock) செய்தபின் மேலும் அதில் மாற்றம் செய்ய இயலாது. எனவே, உறுதி செய்வதற்கு முன் மிகவும் கவனமாக விருப்ப பட்டியலை சரிப்பார்த்த பின் உறுதி (Lock) செய்யவும்.<br>• விருப்பங்களை வரிசையாக உள்ளிட்டபின் குறித்த நேரத்திற்குள் உறுதி செய்ய (Lock) தவறியவர்களின் விருப்ப பட்டியலை System தானாகவே Lock செய்து விடும். |
| 3 | தற்காலிக ஒதுக்கீட்டை உறுதி செய்தல் மற்றும் விருப்பத்தை சமர்பித்தல் | 28.07.2018 முதல் 29.07.2018 மாலை 5 வரை | A) தரவரிசை மற்றும் விருப்ப வரிசை பட்டியலின் படி தற்காலிக ஒதுக்கீடு TNEA இணையதளத்தில 28.07.2018 அன்று வெளியிடப்படும்.<br>B) TNEA உள்நுழைவு (login) வழியாக விண்ணப்பதாரர்கள் தங்களின் தற்காலிக ஒதுக்கீட்டை காணலாம்.<br>C) விண்ணப்பதாரர்கள் 29.07.2018 அன்று மாலை 5 மணிக்குள் ஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும். | • தங்களுக்கான ஒதுக்கீட்டை உறுதி செய்யவோ அல்லது எந்த ஒரு option-யும் சமர்பிக்க தவறினால், ஒதுக்கப்பட்ட இடம் தரவரிசைப்படி அடுத்த விண்ணப்பதாரர்களுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்படும்.<br>• தற்காலிக ஒதுக்கீட்டை உறுதி செய்ய option-ஐ சமர்பிக்க தவறியவர்கள் அடுத்த சுற்று கலந்தாய்வு இருக்கும் பட்சத்தில் அச்சுற்றின் காலி இடங்களுக்கேற்ப புதிதாக விருப்ப வரிசை பட்டியலை அச்சுற்றில் உள்ளிட்டு அச்சுற்றின் வழிமுறைகளின்படி பங்கு கொள்ளலாம். |
| 4 | இறுதி ஒதுக்கீடு | 30.07.2018 | A) இறுதி ஒதுக்கீடானது தரவரிசைப்படியும், விருப்ப வரிசை பட்டியல் மற்றும் தற்காலிக ஒதுக்கீடு சமர்ப்பித்த option-ன் படி செய்யபட்டு 30.07.2018 அன்று வெளியிடப்படும்.<br>B) விண்ணப்பதாரர் தனது ஒதுக்கீட்டு ஆணையை TNEA இணையதளத்தின் உள்நுழைவு (login) வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். | |
| 5. | கல்லூரி சேர்க்கை | 03.08.2018 | 03.08.2018-ஆம் தேதி அன்றோ (அ) முன்பாகவோ ஒதுக்கீடு பெற்ற கல்லூரிக்குச் சென்று சேர்க்கை வழிமுறைகளை நிறைவேற்ற வேண்டும். | |

விண்ணப்பதாரர்களுக்கு பதிவு செய்த கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) அறிக்கை சுற்றின் ஒவ்வொரு நிலையிலும் அனுப்பப்படும். எனவே, பதிவு செய்த கைப்பேசியில் TNEA SMS-ஐ தொடர்ந்து கவனித்து வரவும். தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையங்கள் (TFC) அனைத்தும் விருப்ப வரிசைப்பட்டியல் உள்ளீடு செய்தல் மற்றும் தற்காலிக ஒதுக்கீடு option-ஐ சமர்பித்தல் போன்ற சுற்றின் நிலைகளில் உதவி புரியும். கல்ந்தாய்வு சார்ந்த அனைத்து செயல்களையும் https://tnea.ac.in என்ற இணையதளத்தில் மட்டுமே செய்யவும். TNEA கலந்தாய்வின் அறிவிப்புகளை மேற்குறிப்பிட்ட இணையதளத்தின் வழியாக பார்த்துக் கொள்ளவும் மேலும் தகவல்களுக்கு **Instructions to candidates** ஆவணத்தை கவனமாக படித்து தெரிந்து கொள்ளவும் மருத்துவப் படிப்பிற்கான கலந்தாய்வில் கலந்து கொண்ட விண்ணப்பதாரர்கள் தங்களது மருத்துவ ஒதுக்கீட்டு ஆணையை TFC-யில் சமர்பித்த பின்பே தற்காலிக ஒதுக்கீட்டை உறுதி செய்ய இயலும்.